சார்பு நீதிமன்றம், முதுகுளத்தூர்

மோ.வா.வி.ந.மஎண்.4/2023

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05ம் நாள் மனுதாரர் தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1944ம் ஆண்டின் உறுதிமொழி சட்டத்தின்படி திரு.த.ராஜகுமார், எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதியாகிய என்னால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

பெயர் : வீரபத்திரன்

**05.09.2024**

ம.சா. :1

1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

1. விபத்து நடந்த இடம் கிழக்குக் கடற்கரைச் சாலை தானே என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் இருந்து நான் ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் முதன் முதலில் சென்றேன் என்றால் 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் சென்றேன்.

2. 108 அவசர ஊர்தி வருவதற்கு முன்பே விபத்து நடந்த இடத்திற்கு காவலர்கள் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த இடத்திலேயே நான் காவல்துறையிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான். ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை.

3. சம்பவ இடத்தில் புகார் வாக்குமூலம் வாங்கியது சரிதானே என்றால்ஆமாம். மனுவில் எவ்வாறு விபத்து நடைபெற்றுள்ளது என்று நான் சொல்லியுள்ளேனோ அதுபோலத்தானே சம்பவ இடத்தில் வைத்து விபத்து எவ்வாறு நடந்தது என்று சொன்னேனா என்றால் ஆமாம்.

4. மனுவில் எவ்வாறு சொல்லப்பட்டுள்ளதோ அதேபோலத்தான் ராமநாதபுரம் மருத்துவமனையில் மருத்துவரிடம் சொன்னேன். ராமநாதபுரம் மருத்துவமனை மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலை இந்த மனுவில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ராமநாதபுரம் அரசு மருத்துவரிடம் நானே இருசக்கர வாகனத்தில் கீழே தவறி விழுந்தததால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றாலும், அதனால் தான் ராமநாதபுரம் அரசு மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலை நான் தாக்கல் செய்யாது மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல.

5. என் தரப்பில் மனுவில் எனக்கு சொந்த ஊரில் 10 ஏக்கர் நஞ்சை, 10 ஏக்கர் புஞ்சை

சொல்லியுள்ள நிலையில் அது சம்பந்தமான பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால்செய்துள்ளேன். நான் செங்கல் சூளை வைத்து தொழில் செய்து வந்தேன் என்பதைக் காட்ட ஆவணம் எதையும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. அது என்ன ஆவணம் என்றால் என்னிடம் அது சம்பந்தமான கனிம மற்றும் சுரங்கத்துறை உரிமத்தை நான் தாக்கல் செய்துள்ளேன்.

6. தேவதாஸ் மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட ஆவணங்கள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டவைகள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ14 ஐ வழங்கிய ஓட்டுநரை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். விபத்து நடந்த போது என்னுடைய உடைமைக்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் விபத்தின்போது என்னுடைய அலைபேசி கீழே விழுந்துவிட்டது. அதை யாரோ எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

7. மற்றபடி என் காலில் தான் பெரும் விபத்து ஏற்பட்டுள்ளது.அவ்வாறு அலைபேசி காணாமல் போய்விட்டது என்று போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நானும், இருசக்கர வாகனத்தை ஓட்டி ரமேஸ் என்பவரும் தலைக்கவசம் அணிந்திருந்தோம் என்றால் சரிதான். அப்போது இருசக்கர வாகனத்தை ஓட்டிய ரமேசுக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் தெரியாது.

8. அந்த ரமேஸ் ஓட்டிய வாகனமானது அந்த ரமேசுக்கு சொந்தமானது கிடையாது என்றாலும், அந்த வாகனத்திற்கு காப்பீட்டுச் சான்று கிடையாது என்றாலும் எனக்கு தெரியாது. நான் தற்செயலாகத்தான் அந்த இருசக்கர வாகனத்தில் சென்றேன். ஏற்கனவே இந்த விபத்து சம்பவத்திற்கு முன்பு முன்பு ஒரு விபத்தில் சிக்கி எனது காலில் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. நான் மனுவிற்காக முன்பு விபத்தில் சிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், 1,2 எதர்மனுதாரர்களிடம் நான் முன்பு விபத்தில் சிக்கியதாக ஆதாரங்கள் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு எந்த வித சேதாரமும் இல்லை என்றால் அது போலீசாரை கேட்டால் தான் தெரியும்.

10. எங்கள் ஊரில் இருந்து வாடகை காரில் மதுரைக்குசெல்ல எவ்வளவு கட்டணம் என்றால் 5000 ரூபாய் ஆகும். நான் பயணித்த வாகனத்தை ஓட்டிய ரமேசுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் அவருக்கு லேசாக காலில் அடிபட்டது. அவரும்

அரசு மருத்துவமனைக்கு சென்றார்.

**11.** நான் ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எவ்வளவு மணி நேரம் இருந்தேன் என்றால் 2,3 மணி நேரம் இருந்திருப்பேன். நான் எந்த தேதியில் ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தேனோ அங்கிருந்து மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். இது சம்பந்தமான வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடியில் உள்ளது.

**12.** என்னுடைய புகாரில் உண்மை இல்லாத காரணத்தினால் வழக்கை முடித்துவிட்டார்கள்.நான் கொடுத்த புகார் வாக்குமூலத்திற்கு போலீசார் எந்தவித எப்ஐஆர் நகலும் வழங்கவில்லை. நான் விபத்திற்கு முன்பே நீரழிவு, இரத்த அழுத்தம் போன்றவற்றிக்கு தொடர் சிகிச்சை எடுத்து வருகிறேனா என்றால் இல்லை. விபத்திற்கு பிறகுதான் மருந்து மாத்திரை ஏற்படும் நிலை உள்ளது.

**13.** 1 வது எதிர்மனுதாரர் சரியான கவனத்துடனும், நிதானத்துடனும், சாலை விதிகளை பின்பற்றி ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்திற்கு முன்னாடி மற்றொரு டிராக்டர் வாகனம் வந்ததா என்றால் எதிரே வந்த ஒரு டிராக்டரை இன்னொரு டிராக்டர் முந்திச் செல்ல முற்பட்டபோது தான் அதன் பின்னே வந்த வண்டி எங்கள் மீது மோதிவிட்டது.

**14.** நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் கடலாடி நீதிமன்றத்தில் விபத்து வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் நகலை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் காவல்துறையிடம் எந்த புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன்பேரில் கீழச்செல்வனூர் காவல்நிலையத்தார் எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**15.** நான் சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லாததால் பெரிய வாகனமான டிராக்டர் வாகனம் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய வயது முதிர்வின் காரணமாக நானே கீழே விழுந்துவிட்டேன் என்றாலும், விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் எந்த விதத்திலும் காரணமாக மாட்டார் என்றாலும் எனவே என்னுடைய மனு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**16. வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை.**